செ. கு. எண்: 006 நாள் : 19.01.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. ஓ. பன்னீர்செல்வம்** அவர்களின்

அறிக்கை – 19.1.2015

திருப்பூர் மாவட்டம், **அமராவதி அணையிலிருந்து,** திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடக் கோரி வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருப்பூர் மாவட்டம், **அமராவதி அணையிலிருந்து,** திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு **20.1.2015 முதல்** தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்படுகிறது.

இதனால், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள **47,117 ஏக்கர்** நிலங்கள் பயன்பெறும்.

**ஓ. பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**